- ஆகவே, தெளிந்த ஞானத்துடன் இப்பாடல்களை கற்று அறிய முற்படும் போது இப்பாடல்கள் மக்களிடம் சென்று சேரும். அப்போது மனிதகுலத்திற்குப் பெரிதும் நன்மைகள் கிட்டும் என்பது திண்ணம்.
- சித்தர்களின் புரட்சி சிந்தனைகள் தோன்றிய காலத்தில், பக்தி இயக்கங்கள் வளர்ச்சியுற்றன. அதனால் முரண்பட்ட கருத்துக்களாகச் சித்தர்களின் சிந்தனைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.
- மக்களால் பித்தர்களாக அடையாளம் காட்டப்பட்டு, இவர்தம் பாடல்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.
- சித்தர் பாடல்கள் மக்களிடத்து அக்காலம் முதல் இக்காலம் வரையில் முழுமையாகச் சென்று சேராமைக்கு, அக்கால அரசியல் பின்னணியும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.
- இந்நிலைகள் மாறுவதற்கு அடித்தளமாக கல்லூரிகளில் இளங்கலை, முதுகலைத் தமிழ்ப் பாடத்திட்டத்தினுள் சித்தர் பாடல்களும் இடம்பெறுதல் வேண்டும்.
- சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைய அரும்பாடுபட்ட சித்தர்களின் முற்போக்குச் சிந்தனைகள் எதிர்வரும் தலைமுறையினருக்கு உரிய வகையில் கொண்டு சேர்ப்பது நம் தலையாய கடமையாகும்.
- சித்தர்களின் சமூகச்சீர்த்திருத்தச் சிந்தனைகள் உலக மக்கள் அனைவருக்கும் எவ்விதத் தடைகளுமின்றிச் சென்று சேர வேண்டும்.

## துணைநின்றவை


- தமிழ்ப்பிரியன், (முதற்பதிப்பு, டிசம்பர் 2014), சித்தர் பாடல்கள் மூலமும் உரையும், சென்னை: கற்பகம் புத்தகாலயம்
- கணபதி டி.என்., சித்தர்களின் குறியீட்டு மொழியும் சூனிய சம்பாஷணையும், ரவி பப்ளிகேஷன்ஸ், தமிழ்ச் சித்தர் ஆய்வு மையம் வெளியீட்டு எண் – 3.
- ரிஷபானந்தர், (2005), சித்தர்கள் கண்ட மானுட ரகசியம், சென்னை: அழகு பதிப்பகம்.
- மாணிக்கவல்லி பொன்., (முதற்பதிப்பு டிசம்பர் 2015), திருமந்திர யோக விளக்கம், காரைக்கால்: விழிச்சுடர் பதிப்பகம்.


*****************

# கணித்தமிழ் கற்பித்தலில் உள்ள சிக்கல்களும் தீர்வுகளும்
# Problems and Solutions in Tamil Computing Teaching


## முனைவர் இரா.தனசுபா | Dr. R. Dhanasuba

உதவிப் பேராசிரியர் – தமிழ்த்துறை, சைவபானு சத்திரிய கல்லூரி, அருப்புக்கோட்டை – 626102, தமிழ்நாடு, இந்தியா, Mail id : traj.acc@gmail.com, Orcid id : https://orcid.org/0000-0001-7551-7993


## ஆய்வுச் சுருக்கம்


கன்னித்தமிழ் கணினித்தமிழாக வடிவெடுத்துப் பல்லாண்டு ஆகிவிட்டது. ஆயினும் கணினியில் ஆங்கிலமொழி வளர்ச்சி பெற்றுள்ள அளவிற்குத் தமிழ்மொழி வளர்ச்சியடையவில்லை. "ஒரு சமுதாயம் இன்றைய பணிகளை இன்றைய கருவி கொண்டு செய்ய வேண்டும். இன்றைய பணியை நேற்றைய கருவி கொண்டு செய்யும் இனத்தின் நாளைய வாழ்வு நலிவடையும்" என்னும் சிந்தனைக்கேற்ப இணையத்தில் தமிழ்மொழியைப் பயன்பாட்டு மொழியாக்குவதற்குக் கணித்தமிழ் வளர்ச்சியடைய

வேண்டும். சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை பல தரவுகள் கணினியில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு உள்ளீடு செய்ததவை அனைத்தையும் தமிழை முதன்மைப் பாடமாகப் படிக்கும் கல்லூரி மாணவர்கள் அறிந்துள்ளனரா என்பதையும் அவர்களுக்குக் கணித்தமிழைக் கற்பிப்பதில் உள்ள சிக்கல்கள் குறித்தும் ஆய்வு செய்து அதனைப் போக்குவதற்குரிய தீர்வை முன்மொழிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.


## Abstract

It has been many years since Kannithamil was formed as a computer Tamil. However, the Tamil language has not developed to the extent that the English language has developed in the computer. A society needs to do today's tasks with today's tool. Mathematical Tamil needs to be developed to make Tamil a working language on the Internet in line with the idea that the future life of the race that does today's work with yesterday's tool will be ruined. Many data have been entered into the system, from Sanskrit literature to contemporary literature. The purpose of this article is to examine whether college students who study Tamil as a primary subject are aware of all such inputs and to find solutions to their problems in teaching mathematical Tamil.


**திறவுச் சொற்கள் (Keywords):** இணையதளம் - Internet, குறுஞ்செயலிகள் - Apps, மென்பொருள் - Software, தேடுபொறி – Search Engine, சமூக ஊடகங்கள் - Social Media, அகரமுதலி - Dictionary, சொற்பிழை திருத்தி – Spell Checker, எழுத்துணரி - Text to Speech

## முன்னுரை

'மாற்றம் ஒன்றே மாறாத் தத்துவம்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தொழில்நுட்பங்கள் மாறிக் கொண்டும் வளர்ந்துகொண்டும் உள்ளன. அவற்றைத் தமக்குள் உள்வாங்கிக் கொண்டு நீடிக்கும் மொழிதான் காலம்கடந்து நிற்கும். மற்றவை காலப்போக்கில் பயன்பாடு குறைந்து அழிந்துபோகும் அபாயம் உள்ளது. முதலில் தோன்றிய மொழி, இருபதாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த மொழி, செம்மொழி போன்ற சிறப்புகளைப் பெற்ற தமிழ்மொழி இன்று கணினிவழியிலும் வளர்ச்சியடைந்து வருகிறது. தொழில்நுட்ப வல்லுநர்களும் தமிழ் அறிஞர்களும் இணைந்து பணியாற்றிக் கணினிவழியே தமிழ்மொழியைக் கற்பதற்கும் கற்பிப்பதற்குமான முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். கணித்தமிழை, கணினியைக் கற்பிப்பதில் பல சிக்கல்கள் உள்ளன. அச்சிக்கல்கள் என்ன என்பதை ஆராய்ந்து அதற்குச் சரியான தீர்வு காணவேண்டும்.

## கற்றல்-கற்பித்தலில் கணினியின் பயன்பாடு

ஒருகாலத்தில் அஷ்டாவதானி, தசாவதானி, சதாவானி என்று மனிதர்களின் திறமைகளைப் போற்றினர். இன்று மனிதனுக்குப் போட்டியாக கணினிகள் பல்வேறு திறன்களுடன் வளர்ந்து வருகின்றன. குழந்தைகளுக்கான அடிப்படைத்தமிழ் தொடங்கி அறிஞர்களுக்கான ஆய்வுத்தமிழ் வரை கணினிவழி தமிழ் கற்பதற்கான சூழல்கள் உருவாகியுள்ளன. வலைப்பதிவு, சமூக வலைதளங்கள் என காலத்திற்கு ஏற்ப வகுப்பறைகளைக் கடந்து மாணவர்களுடன் ஆசிரியர்கள் தொடர்பில் இருக்கும் நிலை உருவாகி உள்ளது. இந்நிலையில் தமிழ் கற்றல் - கற்பித்தலுக்குக் கணினியைச் சரியாகப் பயன்படுத்தினால் உலகு பரவி வாழும் தமிழர்களுக்கும் அடுத்த தலைமுறைக்கும் தமிழைக் கொண்டு சேர்க்க முடியும். கணினி மூலமாகப் பலவகைகளில் கற்றல்-கற்பித்தல் செயலை மேம்படுத்த முடியும்.

இணையதளங்கள், சமூக ஊடகங்கள், தேடுபொறி நிறுவனங்கள், குறுஞ்செயலிகள், மென்பொருள்கள் போன்று பல வழிகளில் இன்று தமிழ்மொழி வளர்ச்சியடைந்து வருகிறது. வெளிநாடுவாழ் தமிழர்கள் தங்கள் குழந்தைகள் தம் தாய்மொழியாம் தமிழைக் கற்க வேண்டும் என்ற ஆவலின் காரணமாக இம்முயற்சியை ஊக்குவித்துச் சிறந்த பங்காற்றி வருகின்றனர்.

## தமிழ் இணையதளங்களின் பங்கு

தமிழ்மொழியைக் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் பல இணையதளங்கள் உள்ளன. ஆங்கிலத்தின் வழியாகத் தமிழ் கற்றல், மலாய்மொழியின் வழியாகத் தமிழ் கற்றல் என உலகத்தின் பெருமொழிகள் பலவற்றின் வழியாகத் தமிழைக் கற்பதற்குரிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன. முறையாகச் செய்யப்பட்ட கலைத்திட்டங்கள், பாடங்கள் ஆகியவற்றை இணையத்தின் வழியே படிப்பதன் வழியாகத் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ள முடியும்.

தொடக்கத்தில் ஆங்கிலம் கற்றுக் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட இணையதளங்கள் காலப்போக்கில் உலகில் இருக்கும் அனைத்து மொழி கற்றலுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வகையில் 'தமிழ் இணையக் கல்விக் கழகம்" (http://www.tamilvu.org/) முன்னிலை வகிக்கிறது. இந்த இணையப் பக்கத்தில் தமிழில் அடிப்படைக் கல்வியிலிருந்து பட்ட மேற்படிப்புக் கல்விவரை படிக்க முடியும். இதைப் போன்று அமெரிக்காவிலிருந்து தெற்காசியாவின் மொழிகளைக் கற்றுக் கொடுக்க உருவாக்கப்பட்ட 'தெற்காசிய மொழி வழி மையம்" என்ற இணையப் பக்கம் உள்ளது. இது அமெரிக்காவில் வாழும் தமிழ்க்குழந்தைகள் தமிழ்மொழியைக் கற்றுக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டது. (http://www.southasia.sas.openn.edu/tamil/index.html)

குழந்தைகள் வீட்டில் இருந்தபடியே இணைத்தின் வழியாகத் தமிழ் கற்கும் வகையில் தமிழ்க்கழகம் (http://www.tamilacademy.com/) என்ற இணையதளம் உருவாக்கப்பட்டது. மழலைக்கல்வி முதல் ஏழாம்நிலை வரையிலான கல்வியை இத்தளம் வழங்குகிறது. இத்தளமும் அமெரிக்காவிலிருந்து செயல்படுகிறது. மேலும் இதன் மற்றொரு பிரிவு தமிழகத்தில் விருதுநகர் மாவட்டத்தில் செயல்படுகிறது.

இவற்றைப்போல இன்னும் பல இணையதளம் தமிழ் கற்றல்-கற்பித்தல் சேவையைச் செவ்வனே செய்து வருகின்றன. அவற்றில் சில:

- http://www.valaitamil.com/
- http://eluthu.com/
- http://tamillexicon.com/
- http://neechalkaran.com/
- http://tamilunltd.com/
- http://tamizhagam.net/about/aboutus.html

## தமிழ் கற்பிக்கும் குறுஞ்செயலிகள்

"சராசரி ஆசிரியர் பாடத்தைக் கற்பிக்கிறார். சிறந்த ஆசிரியர் நடைமுறை உதாரணங்களோடு கற்பிக்கிறார். உன்னதமான ஆசிரியர் உயிரோட்டத்தை ஏற்படுத்துகிறார்." என்று வில்லியம் ஆலபர்ட் உன்னத ஆசிரியனுக்கு இருக்கும் திறனை எடுத்துக்காட்டியுள்ளார். இன்று தொழில்நுட்ப அறிவைப்பெற்ற ஆசிரியர் இத்தகு உயிரோட்டமிகு பாடத்தை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றனர். இவ்வகையில் கற்றல் - கற்பித்தல் குறுஞ்செயலிகள் உலக அளவில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. அலைபேசியில் குறுஞ்செயலிகள் உருவாக்கப்பட்டு இவ்வுலகம் முழுதையும் ஆட்டிவைக்கிறது எனலாம்.

இன்று தமிழ்க் குறுஞ்செயலிகள் பல உருவாக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளன. புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் தம் தாய்மொழியாம் தமிழைத் தனது சந்ததியினர் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற பேரவாவில் பல தமிழ்க் குறுஞ்செயலிகளைப் பயன்படுத்தியும் உருவாக்கியும் வருகின்றனர். தமிழர்கள் அதிகம் வாழும் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாட்டு வகுப்பறைகளில் தமிழ்க் குறுஞ்செயலிகள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. ககூட், தமிழ் 101, மழலைத்தமிழ், பேபி ஸ்லேட் தமிழ், கிட்ஸ் மீடியா தமிழ், மூடுல்ஸ், அரேஸ்மா, ராக்மேன், பாலமுருகன், தமிழ் கொட்ஸ், Learn Tamil Writing, தமிழ் நூலகம், தமிழ்க் காப்பியம், தேவாரம், கவிஞர்கள், சங்கம் போன்ற எண்ணற்ற குறுஞ்செயலிகள் உலக அளவில் தமிழ்மொழியை வளர்க்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளன.

## எழுத்துப் பயிற்சிச் செயலிகள்

ஆப்பிள் நிறுவனத்தின் செயலி சந்தையில் (Apple App Store) தமிழ் எழுத்துப் பயிற்சிக்காகவும் எழுதும் துறைகளை அறிவதற்காகவும் பல செயலிகள் மேம்படுத்தப்பட்டு இன்றைய பயன்பாட்டில் உள்ளன.

தமிழ் 101 செயலி – சிவக்குமார் லோகநாதன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. எழுத்துக்களைக் கேட்டு எழுதும் வகையில் அமைந்துள்ளது.

- Learn Tamil Writing செயலி – வேகமாப் நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டது.
- மழலைத்தமிழ் செயலி – மேஜிக்பாக்ஸ் நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டது.
- Tamil Alphabetic Tracing செயலி – விக்னேஷ் என்பவரால் கண்டுபிடிக்கபட்டது.
- சங்கம் செயலி – Melio Sistems நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் தமிழ் எழுத்துக்களை உச்சரிக்கக் கற்றுத்தரும் செயலிகளும், தமிழ் அகராதிகளும், தமிழ்த் தட்டச்சுச் செயலிகளும், ஏராளமாகப் பயன்பாட்டில் உள்ளன.

மேலே குறிப்பிட்ட பல தொழில்நுட்ப உட்பிரிவுகளின் வாயிலாகக் கற்றல் - கற்பித்தல் நடைபெற்றாலும் இதற்கெல்லாம் மூலமாக இருந்து செயல்படுவது மென்பொருள்கள். இன்று பல்வேறு மென்பொருள்கள் கற்றல் - கற்பித்தலுக்காகத் தயாரிக்கப்பட்டு உலகச் சந்தையில் வியாபாரம் செய்யப்படுகின்றன. அவற்றை வாங்கிப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே உள்ளது.

## கணித்தமிழ் கற்பித்தலில் உள்ள சிக்கல்கள்

தமிழ் எழுத்துருக்கள், இணையதளங்கள், மென்பொருள்கள், குறுஞ்செயலிகள், வலைதளங்கள், மின் அகரமுதலிகள், தமிழ் எழத்துணரிகள், சொற்பிழை திருத்திகள் போன்றவற்றைத் தமிழ் இலக்கியம் படிக்கும் மாணவர்கள் ஓரளவு அறிந்திருந்தால் மட்டுமே ஆசிரியர்கள் அவர்களது கணித்தமிழ் அறிவை மேம்படுத்த முடியும். கல்லூரிகளில் தமிழ் இலக்கியம் படிக்கும் மாணவர்களின் கணித்தமிழ் அறிவைச் சோதிப்பதற்காக விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சில கல்லூரிகளில் தமிழ்த்துறையில் படிக்கும் இளங்லை மற்றும் முதுகலை மாணவர்களிடையே களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழ் இலக்கியத்தை முதன்மைப் பாடமாகப் படிக்கும் கல்லூரி மாணவர்களிடையே தமிழ் இணைய அறிவைச் சோதிக்கும் வகையில் வினா - நிரல் தயாரிக்கப்பட்டது. வினாக்களுக்கு அவர்கள் அளித்த விடைகளை ஆய்வு செய்து அவர்களின் தமிழ் இணைய அறிவு அறியப்பட்டது. ஆய்வுக்காலம் மற்றும் ஆய்வு எல்லை கருதி விருதுநகர் மாவட்டத்தில் உள்ள கலை - அறிவியல் கல்லூரிகளில் தமிழ் இலக்கியம் படிக்கும் இளங்கலை மூன்றாமாண்டு, முதுகலை முதல் மற்றும் இரண்டாமாண்டு மற்றும் ஆய்வு மாணவர்கள் இவ்வாய்விற்கு எடுத்துக்

கொள்ளப்பட்டனர். மொத்தம் 9 கல்லூரிகளில் படிக்கும் 533 மாணவர்களுக்கு வினா-நிரல் கொடுத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கலை - அறிவியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களில் பெரும்பாலானோர் சமூக பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியவர்களாக உள்ளனர். இவர்களுக்கு இணையம் பயன்படுத்தும் வாய்ப்பும் குறைவாகவே உள்ளது. பெரும்பாலான மாணவர்கள் இணைய அறிவைப் பெறுவதற்கு ஆர்வமாக இருந்தால்கூட சிறந்த வழிகாட்டுதல்கள் இல்லை. மேலும் இணையத் தமிழில் போதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போதுதான் சில ஆய்வுக் கட்டுரைகளும் ஆய்வேடுகளும் வெளிவந்த வண்ணம் உள்ளன. இன்னும் பழந்தமிழ் இலக்கியங்களை ஆர்வத்துடன் ஆய்வுசெய்யும் சிறந்த தமிழ்ப் பேராசிரியர்கள் பலரும் இணையத்தமிழ் பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் காட்டவில்லை. இப்படிப் பல காரணங்கள் அவர்கள் இணைய அறிவைப் பெறுவதற்குத் தடையாக உள்ளது. மாணவர்கள் அளித்த விடைகளை ஆய்வு செய்து இணைய அறிவை மேம்படுத்துவதற்கு நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் கண்டறியப்பட்டன. தமிழ் கற்ற பேராசிரியர்களும் மாணவர்களும் தமிழ்மொழியை இணையத்தில் கோலோச்சச் செய்ய வேண்டும் என்ற முனைப்பில் பணியாற்றினால் தமிழ்மொழியையும் இலக்கியங்களையும் உலகறியச் செய்யலாம். களஆய்வின் மூலம் கீழ்க்கண்ட ஆய்வு முடிவுகள் கண்டறியப்பட்டன.

**வினா- நிரல்**

பெயர் : கல்லூரியின் பெயர் :

வகுப்பு : நாள் :

1. உனக்கு தமிழில் தட்டச்சுச் செய்யத் தெரியுமா?

அ) தெரியும் ஆ) தெரியாது இ) ஆர்வமில்லை.

2. இணையதளங்களைப் பயன்படுத்தத் தெரியுமா?

அ) தெரியும் ஆ) தெரியாது இ) ஆர்வமில்லை.

3. தமிழ் இணையதளங்களைப் பற்றிய அறிவு.

அ) அதிகம் ஆ) குறைவு இ) இல்லை.

4. உனக்கெனத் தனி மின்னஞ்சல் முகவரி வைத்துள்ளாயா?

அ) உள்ளது ஆ) இல்லை இ) தெரியாது

5. இணையதளங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு

அ) அதிகம் ஆ) குறைவு இ) இல்லை.

6. தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பதிவிறக்கம் செய்து படிக்கும் பழக்கம் உள்ளதா?

அ) உள்ளது ஆ) இல்லை இ) குறைவு

7. உனது படைப்பை இணையதளப் பக்கங்களில் பதிவேற்றம் செய்துள்ளாயா?

அ) பதிவேற்றியுள்ளேன் ஆ) பதிவேற்றவில்லை இ) பதிவேற்றத் தெரியாது

8. இணைய நூலகங்களைப் பயன்படுத்தும் பழக்கம் உள்ளதா?

அ) உள்ளது ஆ) இல்லை இ) தெரியாது

9. மின்னிதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளைப் படைத்ததுண்டா?

அ) உண்டு ஆ) இல்லை இ) தெரியாது

10. உலக இணையத்தமிழ் அமைப்புகள், நிறுவனங்களின் செயல்களைப் பற்றித் தெரியுமா?

அ) தெரியும் ஆ) தெரியாது இ) ஆர்வமில்லை.

11. இணையத்தமிழ் மாநாடு, கருத்தரங்கு மற்றும் பயிலரங்குகளில் கலந்துகொண்டது உண்டா?

அ) உண்டு ஆ) இல்லை இ) வாய்ப்புக் கிடைக்கவில்லை.

12. உனது பாடத்திட்டத்தில் இணையத்தமிழ்க்கல்வி இடம்பெற்றால் உனக்குப் பயனுள்ளதாக இருக்குமா?

அ) இருக்கும் ஆ) இருக்காது இ) தேவையில்லை.

13. தமிழ்க் குறுஞ்செயலிகளைப் பயன்படுத்தும் வழக்கம் உள்ளதா?

அ) உள்ளது ஆ) இல்லை இ) தெரியாது

14. இணையத் தமிழ்க்கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டால் ஆர்வமாக பங்கேற்பீர்களா?

அ) பங்கேற்பேன் ஆ) பங்கேற்க மாட்டேன் இ) தேவையில்லை.

15. இணையத்தமிழ்க் கல்வியைக் கற்றுக் கொடுப்பதன் மூலம் தமிழ்மொழியை உலகத்தரத்திற்கு உயர்த்த முடியுமா?

அ) முடியும் ஆ) முடியாது இ) தேவையில்லை.

16. சமூக வலைதளங்களில் நீ பயன்படுத்தும் மொழி?

அ) தமிழ் ஆ) ஆங்கிலம் இ) இரண்டும் கலந்து

(கையொப்பம்)

மொத்த மாணவ மாணவியர் - 533

| வினா எண் | அ | ஆ | இ |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | 192 | 299 | 42 |
| 2 | 274 | 229 | 30 |
| 3 | 59 | 426 | 48 |
| 4 | 284 | 241 | 8 |
| 5 | 101 | 352 | 80 |
| 6 | 160 | 308 | 65 |
| 7 | 61 | 404 | 68 |
| 8 | 150 | 352 | 31 |
| 9 | 16 | 437 | 80 |
| 10 | 72 | 446 | 15 |
| 11 | 514 | 8 | 11 |
| 12 | 506 | 25 | 2 |
| 13 | 168 | 301 | 64 |
| 14 | 514 | 8 | 11 |
| 15 | 518 | 12 | 3 |
| 16 | 142 | 127 | 264 |

**கள ஆய்வில் கண்டறிந்த உண்மை**

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 9 கல்லூரிகளில் தமிழ் இலக்கியம் படிக்கும் 533 மாணவர்களிடம் செய்யப்பட்ட ஆய்வில் கீழ்க்ண்ட ஆய்வு முடிவுகள் கண்டறியப்பட்டது.

- 50 சதவீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் தமிழில் தட்டச்சு செய்யத் தெரியாதவர்களாக உள்ளனர்.
- இணையதளங்களைப் பயன்படுத்தும் பழக்கம் இருப்பினும் பொழுதுபோக்கிற்காக சமூக வலைதளங்களை மட்டுமே பயன்படுத்துகின்றனர்.
- தமிழ் இணையதளங்களைப் பற்றிய அறிவு மிகவும் குறைவாக இருப்பதால் இலக்கணம் மற்றும் இலக்கியங்களைத் தரவிறக்கம் செய்து படிக்கும் பழக்கமும் குறைவாக உள்ளது.
- பெரும்பாலான மாணவர்கள் தனக்கென மின்னஞ்சல் முகவரி வைத்துள்ளார்கள்.
- 66 சதவீத மாணவர்கள் தாங்களுக்கு இணையதளத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது என பதிலளித்துள்ளனர்.
- 3 சதவீத மாணவர்கள் மட்டுமே தமிழ் மின்னிதழ்கள் பற்றி அறிந்திருந்திருந்தனர்.
- இணைய நூலகங்கள் பற்றியும் உலக இணையத்தமிழ் அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் பற்றியும் இணையத் தமிழ் மாநாடு, கருத்தரங்குகள் பற்றியும் 80 சதவீத மாணவர்கள் அறிந்திருக்கவில்லை.
- 95 சதவீத மாணவர்கள் பாடத்திட்டத்தில் இணையத்தமிழ்க் கல்வி இடம்பெற்றால் பயனள்ளதாக இருக்கும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

- இணையத்தமிழ்க்கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டால் ஆர்வமாகப் பங்கேற்பேன் என்றும் அவ்வாறு கற்றுக் கொடுப்பதன்மூலம் தமிழ்மொழியை உலகத் தரத்திற்கு உயர்த்தமுடியும் என்றும் 95 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் பதிலளித்துள்ளனர்.
- 50 சதவீதம்பேர் சமூக வலைதளங்களில் தமிழும் ஆங்கிலமும் கலந்த மொழிநடையைப் பயன்படுத்துவதாகக் கூறியுள்ளனர். இவர்கள் தமிழ் தட்டச்சு தெரியாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.
- ஒட்டுமொத்த ஆய்வின்மூலம் தமிழ் இலக்கியத்தை முதன்மைப் பாடமாகப் படிக்கும் மாணவரிடையே போதிய அளவு இணைய அறிவு இல்லை என்பது கண்டறியப்பட்டது.
- தமிழ் கற்றவர்கள் இணைய அறிவை முழுமையாகப் பெற்றால் மட்டுமே தமிழ்மொழியை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல முடியும் என்பது இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

## தீர்வுகள்

- தமிழ் இலக்கியம் படிக்கும் மாணவர்களுக்கு இளங்கலை முதலாமாண்டிலேயே தமிழ் தட்டச்சுப் பயிற்சியைக் கட்டாயமாக்க வேண்டும்.
- செய்முறைப் பயிற்சியோடுகூடிய இணையத்தமிழைப் பாடத்திட்டமாக்க வேண்டும்.
- தமிழ்மொழியறிவுடன் இணையத்தில் தொழில்நுட்ப அறிவையும் பெற்ற ஆசிரியர்களைப் பணியிலமர்த்தலாம்.
- இணையத்தமிழ் மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் பற்றிய சுற்றிக்கைகள், செய்திகள் போன்றவை அனைவருக்கும் சென்றுசேர வழிவகை செய்யவேண்டும்.

## முடிவுரை

உலகமயமாகிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் 21ஆம் நூற்றாண்டு கற்றல் திறன்களையும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும். கணினி வழியாகத் தமிழ்மொழியை வளர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம். இதனைப் புரிந்து கொண்டு கணினியில் புதிதாக அறிமுகமாகும் தமிழ் மென்பொருள்கள், குறுஞ்செயலிகள், வலைதளங்கள், போன்றவற்றைக் கையாளும் முறையைக் கற்றுக் கொள்வதில் ஆசிரியர்கள் முனைப்புக் காட்ட வேண்டும். அவ்வாறு கற்றுக் கொள்ளும் ஆசிரியரே எதிர்கால மாணவர்களின் கற்றல் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யும் ஆசிரியராக விளங்க முடியும்.

## துணைநின்றவை


- மணிகண்டன் துரை., (மு.ப.2012), தமிழ்க் கணினி இணையப் பயன்பாடுகள், தஞ்சாவூர்: கமலினி பதிப்பகம்.
- இளங்கோவன் மு., (மு.ப.2012), இணையம் கற்போம், பெரம்பலூர்: வயல்வெளிப் பதிப்பகம்.


******************